# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு 2009/2010
## (ஏப்ரல்/மே - 2015) (வெளிவாரி)

**EDU- 201 பிள்ளையின் அபிவிருத்தியையும் கற்றலையும் விளங்கிக்கொள்ளல்**
**(Understanding child development and learning)**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

---

01) (அ) "உயிரியின் கற்றல்" தொடர்பாக பல்வேறு அறிஞர்கள் கூறிய கருத்துக்களை முன்னிலைப்படுத்தி கற்றல் தொடர்பான விளக்கங்களை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) கற்றலைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிட்டு அவை எவ்வாறு குழந்தையின் கற்றலில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை உதாரணம் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

02) (அ) பிள்ளைகளின் இயக்கத்திறன் வளர்ச்சியில் சமூக விளையாட்டுக்களின் பங்களிப்புக்கள் மிகவும் முக்கியமானவையாகும். இதனை குழந்தையின் பிற்பருவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) குழந்தைகளின் மனவெழுச்சிப் பிரச்சினைகள் அவர்களது கற்றலில் ஏற்படுத்தும் தாக்கங்களை உதாரணங்காட்டி விளக்குக.

(10 புள்ளிகள்)

03) (அ) பாடசாலைகளில் இடைநிலை வகுப்புக்களின் வினைத்திறன் மிக்க கற்பித்தலில் தோண்டைக்கின் (Thorndike's) பயிற்சி விதி, விளைவுவிதி, ஆயத்த விதி ஆகியன எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றன என்பதை உதாரணங்காட்டி விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) ஸ்கின்னர் தனது கொள்கையில் குறிப்பிடும் பின்வரும் தொழிற்பாட்டு நடத்தைகளை கற்றலுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

1. நேர்-எதிர் மீளவலியுறுத்தல்
2. தெரிவுசெய் மீளவலியுறுத்தல்
3. தொடர் மீளவலியுறுத்தல்

(10 புள்ளிகள்)

04) (அ) குழந்தைகளில் சிந்தனை எண்ணக்கரு விருத்தியானது எவ்வாறு ஏற்படுகின்றது என்பதற்கு ஜீன் பியாஜே கூறும் கருத்துக்களைப் பரிசீலணை செய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) ஒருவனுடைய நடத்தையானது அவன் வாழும் சூழல் சார்ந்தது என்பதற்கு மார்கிரட் மீட் கூறும் விளக்கத்தை அவரது ஆய்வின் ஊடாக விளக்குக.

(10 புள்ளிகள்)

05) (அ) ஆளுமை வளர்ச்சியில் பங்கெடுக்கும் காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுவதுடன் ஆளுமையை அளவிடும் முறைகளுள் புறத்தேற்று நுண்முறை பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) கற்றல் இடமாற்றம் என்பதற்கு H.S.Elis மற்றும் Cyril Burt கூறும் கருத்துக்களை உதாரணம் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

06) (அ) பின்வருவனவற்றில் நான்கிற்கு விளக்கம் தருக.

1. மக்டூகலின் இயல்பூக்கக் கொள்கை
2. நுண்ணறிவு பற்றிய கொத்துக்காரணிக் கோட்பாடு
3. நுண்மதி ஈவு
4. ஞாபகத்தின் மூன்று படிநிலைகள்
5. புலக்காட்சி

(04X05=20 புள்ளிகள்)

07) (அ) பொருட்களுக்கும் கருத்துக்களுக்கும் இடையே பொருத்தமான தொடர்புகளைக் கண்டறியும் திறன் நுண்மதியில் தங்கியுள்ளது என்பதனை நுண்மதியின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்க.

(10 புள்ளிகள்)

(ஆ) பிள்ளைப்பருவத்தின் நுண்ணறிவு வளர்ச்சியில் பரம்பரை, சூழல் என்பன எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

08) (அ) கட்டிளமைப்பருவ மாணவர்களிடத்தே தோன்றும் சமூக மனவெழுச்சிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள ஒரு ஆசிரியர் எவ்வாறு உதவ முடியும் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) நனவடி நிலை எண்ணங்கள் எவ்வாறு மனிதனின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை சிக்மண்ட் புரொய்டின் உளப்பகுப்புக் கொள்ளையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(10 புள்ளிகள்)